5th November 1966]

திரு. வை. சங்கரன் : ஸார், நம் மாநிலத்தில் இந்தப் பால் பண்ணைத் தொழிற்சாலையை வைப்பதில், பால் கிடைப்பதில் லீன் பீரியட், சர்ப்ளஸ் பீரியட் என்று இருக்கின்றன; சர்ப்ளஸ் பீரியட்டில் கிடைக்கக் கூடிய பாலை வைத்துத் தொழிற்சாலை நடத்தும் முறையில் அது போன்ற திட்டமாவது தயாரிக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர்களுக்குத் தெரியும். லீன் பீரியட்டில் சர்ப்ளஸ் பீரியட் பாலை வைத்துக் கொண்டு உபயோகிக்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். பத்தாயிரம் லிட்டர் சர்ப்ளஸ் பீரியட்டிலேயே கிடைக்கும் இடம் தமிழ் நாட்டில் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, விண்ணப்பித்திருக்கும் தனியார், பண்ணை நடத்தித் தானே பாலை உற்பத்தி செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார். அவருக்கு உடனடியாக லைஸென்ஸ் கொடுத்து, பின் தங்கியிருக்கும் கூடலூரை முன்னுக்குக் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்தான் முன் வர வேண்டும். நாங்கள் உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

Inventions promotion

* 434 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to provide fillip to those who evolve import substitutes and improved techniques in industry, by presenting them with suitable awards?

The Hon. Sri R. VENKATARAMAN : The State Government do not have any such proposal. But the Inventions Promotion Board organised by the Government of India, afford financial assistance in the form of grants or monetary awards to deserving cases.

திரு. வை. சங்கரன் : ஸார், மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றி நாமும் இதுபோன்ற ஊக்கமளிக்கும் நடவடிக்கையை எடுத்துக் கொள்ள முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ட்யூப்ளிகேஷன் ஆஃப் எஃபர்ட் ஆகும்.

Manufacture of asbestos

* 435 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number and details of existing plants and the plants proposed to be set up in the State, for the manufacture of asbestos-sheets and other asbestos based products like asbestos textile yarns, packing cloth, mill board and jointing sheets?

The Hon. Sri R. VENKATARAMAN : Messrs. Asbestos Cement, Ltd. at Podanur is under production, with an annual capacity of 36,455 tonnes of asbestos sheets and pipes.